

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில்தேர்தல் நடத்தும் அலுவலர் தமிழரசனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அருகில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்விஜயகுமார் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் சையத் பாரூக் வட்டாட்சியரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜி, நகர செயலாளர் வி.எஸ்.சாரதிகுமார், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி அமைவது உறுதி!

# உட்கட்சி பிரச்சினையால் பிரதமர் மோடி கடும் அதிருப்தி!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஏப். 8 -

பா.ஜ.க. வில் நடக்கும் உட்கட்சி பிரச்சினையால் தமிழ்நாட்டில் மீண்டும் தி.மு.க.தான் ஆட்சி அமைக்கும் என்று பிரதமர் மோடி கடும் அதிருப்தியில் இருப்பதாக 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

அது வருமாறு:



தினகரன்

ஏப்ரல் 7, 2026 செவ்வாய்க்கிழமை

மோடி அப்செட்

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்று பிற்பகல் 3 மணியுடன் நிறைவடைந்தது. 234 தொகுதிகளுக்கான தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23ம் தேதி நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெறுகிறது. இதற்காக மார்ச் 30ம் தேதி தொடங்கிய வேட்புமனு தாக்கல், நேற்றுடன் நிறைவடைந்தது. இன்று வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறவுள்ள நிலையில், இறுதி வேட்பாளர் பட்டியல் ஏப்ரல் 9ம் தேதி வெளியாகிறது.

வேட்புமனு தாக்கலுக்கான கடைசி நாளான நேற்று திமுக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், அதிமுக பொதுச்செயலாளர்

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்று பிற்பகல் 3 மணியுடன் நிறைவடைந்தது. 234 தொகுதிகளுக்கான தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23ம் தேதி நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெறுகிறது. இதற்காக மார்ச் 30ம் தேதி தொடங்கிய வேட்புமனு தாக்கல், நேற்றுடன் நிறைவடைந்தது. இன்று வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறவுள்ள நிலையில், இறுதி வேட்பாளர் பட்டியல் ஏப்ரல் 9ம் தேதி வெளியாகிறது. வேட்புமனு தாக்கலுக்கான கடைசி நாளான நேற்று தி.மு.க. பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பா.ஜ. தலைவர் நயினார் நாகேந்திரன், ஒன்றிய இணையமைச்சர் எல். முருகன் உள்பட பல பிரபலங்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

சுமார் 7000 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ், தே.மு.தி.க., வி.சி.க., இடதுசாரிகள் உள்ளிட்ட 23 கட்சிகள் இடம்பெற்றுள்ளன. அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க., பா.ம.க., அ.ம.மு.க. உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. நாம் தமிழர் கட்சி மற்றும் த.வெ.க. கட்சிகள் தனித்தனியாக 234 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. இதுபோல் கேரளாவில் 140 சட்டமன்ற தொகுதிக்கும், அசாம் மாநிலத்தில் 126 சட்டமன்ற தொகுதிக்கும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 30 சட்டமன்ற தொகுதிக்கும் இன்று மாலையுடன் பிரச்சாரம் முடிவடைகிறது.

புதுவையில் பிரதமர் மோடி 3ம் தேதியும், நேற்று ஒரே நாளில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தீவிர பிரசாரம் மேற்கொண்டனர். நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. தி.மு.க. கூட்டணியில் முதல்வர் மு.க.ஸ்டாலின், தேர்தல் அறிக்கையை வெளியிட்டு தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இதுபோன்று அ.தி.மு.க. சார்பில் எடப்பாடி பழனிசாமியும் பிரச்சாரம் செய்து வருகிறார். இவரது பிரச்சாரத்தில் எல்லை தாண்டி தனி மனித தாக்குதல் பிரச்சாரத்தை செய்து வருவதாக தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

பிரச்சாரம் என்பது அ.தி.மு.க. ஆட்சியில் சாதனைகளையும், மீண்டும் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன திட்டங்கள், தொகுதி வாரியாக நிறைவேற்றப்படும் என்றும் வாக்குறுதி அளித்து பிரச்சாரம் செய்ய வேண்டும். அதைவிடுத்து மறைந்த தலைவர்கள் குறித்து பேசுவது மிகுந்த அநாகரிகமானது. அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பா.ஜ.வில் உள்கட்சி மோதல் அதிகரித்துள்ளது. கடந்த 3ம் தேதி புதுவையில் ரோடு ஷோவுக்கு வந்த பிரதமர் மோடி, தமிழக பா.ஜ.வில் நடக்கும் உள்கட்சி பிரச்சினையால் கடும் அதிருப்தி அடைந்துள்ளார். இதனால் பிரதமர் மோடி, தமிழகத்தில் நடைபெற இருந்த பிரச்சாரத்தை ரத்து செய்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

மேலும் தமிழ்நாட்டில் மீண்டும் தி.மு.க. தலைமையில் ஆட்சி அமையும் என்பதை உளவுத்துறை மூலம் அறிந்த பிரதமர் மோடி, கடும் அப்செட்டில் இருந்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் முதல்வர் மு.க.ஸ்டாலின், கூட்டணி கட்சிகளை ஒருங்கிணைக்கும் முறை, தேர்தல் பிரச்சார வியூகம், பிரச்சாரத்தால் மக்களை கவரும் விதம், எதிர்க்கட்சி தலைவர்களுக்கு கிலியை ஏற்படுத்தி உள்ளது. வேட்புமனு தாக்கல் நேற்றுடன் முடிவடைந்து, வாக்குப்பதிவுக்கு இன்னும் 16 நாட்கள் இருக்கும் நிலையில் இனி ஒவ்வொரு நாளும் அனல்பறக்கும் பிரச்சாரத்துக்கு பஞ்சம் இருக்காது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.





திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. வேட்பாளர் கவிதா தண்டபாணி வட்டாட்சியரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன்கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## செஞ்சி, மயிலம், திண்டிவனம் தொகுதி – வேட்பாளர்களை ஆதரித்து


# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தேர்தல் பரப்புரை!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

செஞ்சி, ஏப். 8 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர்களை அறிமுகம் செய்து ஆதரித்து கழகத் தலைவர், முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை ஆற்றுகிறார் எனவிழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கையில்:



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் இன்று (08.04.2026 - புதன்கிழமை) மாலை 5 .00 மணி அளவில் விழுப்புரம் நகராட்சி திடலில் செஞ்சி, மயிலம், திண்டிவனம், ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் வெற்றி வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைத்து அவர்களை ஆதரித்து நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பொதுக்கூட்டத்தில் வெற்றி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி சிறப்புரையாற்ற உள்ளார்.

அது சமயம் இக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், தி.மு.க. நிர்வாகிகள், கழக முன்னோடிகள் வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள் (BLA2) பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் (BDA), ஸ்டாலின் மகளிர் படையினர்கள், கழகத் தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறுவிழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டிலேயே கிணத்துக்கடவு தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்றுவேன்!

## கழக வேட்பாளர் கே.வி.கே.எஸ்.சபரிகார்த்திகேயன் பிரச்சாரத்தில் உறுதி!

கிணத்துக்கடவு, ஏப். 8–

கோவை மாவட்டம் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.வி.கே. எஸ்.சபரிகார்த்திகேயன் மதுக்கரை தாலுக்கா அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

அதன் பிறகு அவர் அளித்த பேட்டி வருமாறு:-

"கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆசியோடும், கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆதரவோடும் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியின் கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளேன். மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் அண்ணன் செந்தில் பாலாஜி அவர்களின் ஒத்துழைப்பு, கூட்டணி கட்சி தோழர்கள், கழக உடன்பிறப்புகளின் நல் ஆதரவு ஆகியவற்றோடு தேர்தல் களத்தினை சந்தித்து வருகிறேன்.

இந்தியாவிலேயே இரட்டை இலக்கத்தில் வளர்ச்சி சதவீதத்தை உருவாக்கிய ஒரே முதல்வர் திராவிட மாடல் அரசின் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள். கடந்த ஐந்தாண்டு காலத்தில் நமது அரசு கொண்டு வந்த திட்டங்களும், ஆற்றிய மக்கள் பணியும் தமிழ்நாட்டு வரலாற்றில் இடம்பெறக்கூடியவை.

எனவே, தற்போது மக்களின் ஆதரவோடு சட்டமன்றம் சென்று தொகுதியின் பிரச்சினைகளை சட்டமன்றத்தில் எடுத்துரைத்து அதற்கான தீர்வினை உடனடியாக பெற்று மக்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் சட்டமன்ற உறுப்பினராக இருப்பேன் என்பதை உறுதிபட கூறுகிறேன்.

நீண்டகாலமாக கிணத்துக்கடவு தொகுதியில் மக்கள் பணியாற்றி மக்களின் நம்பிக்கை பெற்றவனாக இருந்து வருகிறேன். ஆகவே, இந்த முறை இங்கே உதயசூரியன் உதிக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் தொடரும், அதன் வழியே கிணத்துக்கடவு தொகுதி தமிழ்நாட்டில் ஒரு முன்மாதிரி தொகுதியாக மாறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

உடன் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.




இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் வட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்தார். உடன் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இசைமுரசு நாகூர் அனிபா

### ஏப்ரல் 8 (2015)



தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் தமது காந்தர்வ இசையால் – 'கணீர்' குரலால் – "அழைக்கின்றார்... அழைக்கின்றார்... அண்ணா", "ஓடி வருகிறான்.. உதயசூரியன்", "கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே!" போன்ற கருத்தாழமிகு பாடல்களால் கழகக் கொள்கைகளைப் பரப்பி வந்த தூய தொண்டர்.

1952–ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா நடத்திய கழகத்தின் முதல் மாநாடு தொடங்கி, அனைத்து மாநாடுகளிலும் இயக்கப் பாடல்களை பாடியவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற உயிரனைய தோழர்.

'இசைமுரசு' எனும் அடைமொழியால், அகிலத்தவரால் அன்பு தவழ அழைக்கப்பட்டவர்.

1989ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில் இவருக்கு "கலைஞர் விருது" வழங்கப்பட்டது.

முரசொலி அறக்கட்டளை சார்பில் 2002ஆம் ஆண்டுக்கான "கலைஞர் விருதும்", ஒரு இலட்ச ரூபாய் பொற்கிழியும் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டார்.

"தன்னுடைய பாடல்கள் மூலம் கழகத் தொண்டாற்றிய இசைமுரசு அனிபா மறைந்தாரே, அவர் புகழ் ஓங்குக!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா அருணாசலம்

### ஏப்ரல் 8 (1981)



கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராகி, புதுக்கோட்டையின் முதல் நகரச் செயலாளராகவும், நீண்டகாலமாக பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.

மும்முனைப் போராட்டத்தில் பங்கேற்றதோடு, மிசா கைதியாக ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் உரையாற்றும்போது "எனது அருமை நண்பர் மிசா அருணாசலம்" என்று நினைவு கூர்ந்து குறிப்பிடுவதே இவருக்குரிய புகழாரமாக அனைவரும் கருதுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**